රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:(94) 011- 2694560 Telephone
ෆැක්ස් தொலைநகல்:(94) 011- 2692254 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය / எனது இல / My No: COM/TRANS/BR/GEN
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.07.11

இணைந்த சேவையின் அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் தகவலுக்காக

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்தம் அல்லாத இடமாற்ற கோரிக்கைகளை நிகழ்நிலையில் (Online) பெற்றுக்கொள்ளல்

காகிதப் பாவனையினைக் குறைப்பதற்கும் மற்றும் தொடர்பாடலை எளிதாக்குவதற்குமான ஒரு வழிமுறையாக வருடாந்தம் அல்லாத இடமாற்றக் கோரிக்கைகளை நிகழ்நிலையில் பெற்றுக்கொள்வதென்பது பொருத்தமானதாகையினால், ஒரு முன்னோடித் திட்டமாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அலுவலர்களுக்காக வருடாந்தம் அல்லாத இடமாற்ற கோரிக்கைகளை நிகழ்நிலையில் (Online) சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

02. நிகழ்நிலையில் (Online) கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க MISCO மென்பொருளைப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன் மென்பொருளை பின்வருமாறு அணுகலாம்.

அ) LGN மூலம் இணைய வசதிகள் வழங்கப்பட்டிருந்தால் http://10.250.1.112/misco/
ஆ) பிற வலையமைப்புக்கள் மூலம் இணைய வசதிகள் வழங்கப்பட்டால் http://43.224.125.68/misco/

MISCO மென்பொருளை அணுகி, அதன் இடைமுகத்தில் உள்ள Help இணைப்பைப் பயன்படுத்துவதன் மூலம், பயனர் வழிகாட்டி (User Guide) குறிப்புகள் மூலம் இது தொடர்பாக தேவையான தகவல்களைப் பெறலாம்.

03. நிகழ்நிலை முறை இடமாற்ற விண்ணப்பம் மூலம் அனைத்து அலுவலர்களும் இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள் என்பதனையும், சேவையின் தேவை, நிறுவனத் தலைவரின் பரிந்துரை, பதில் அலுவலருக்கான தேவை, வெற்றிடங்களின் இருப்பு மற்றும் விருப்பத்திற்குரிய சேவை நிலையம் தொடர்பில் கருத்தில் கொள்ள வேண்டிய தேவைகள் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு மட்டுமே இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்படும் என்பதனையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. மேலும், நிகழ்நிலையில் செய்யப்படும் கோரிக்கைகளுக்கான இடமாற்ற உத்தரவுகள் ஒவ்வொரு மாதமும் 1 மற்றும் 15 ஆகிய திகதிகளில் நிகழ்நிலையில் மட்டுமே வெளியிடப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

05. இது தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், msotransfer.pubad@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் தங்கள் சிக்கலைச் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், சேவையில் ஏதேனும் சிக்கல் இருந்தால், ஒரு பயனராக தரவு அமைப்பில் உள்ளிட்டு அதன் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள CS Inquiry மூலம் தங்கள் விசாரணைகளை இணைந்த சேவைகள் பிரிவிற்கு சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், மேலதிக தகவல்கள் விசாரணைகள் அமைப்பில் உள்ள பயனர்

கையேட்டில் (User Guide) குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், அலுவலர்களின் விபரங்களை கணினி தரவு அமைப்பில் உள்ளிடுவது தொடர்பாக அல்லது தரவு அமைப்பு தொடர்பான தொழில்நுட்பச் சிக்கல்கள் இருந்தால், CS Inquiry மூலம் சென்று, மேலே உள்ள Add Inquiry இணைப்பைத் தேர்ந்தெடுத்து, Category இல் System Related Matters இல் PMO-TRANS இனை தெரிவு செய்து Descriptions இல் தங்கள் பிரச்சனையை சமர்ப்பிக்க முடியும்.

06. அலுவலரின் கோரிக்கை தொடர்பாக இணைந்த சேவைகள் பிரிவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முகப்புப் பக்கத்தில் (Home Page) Notice மூலம் அறிந்து கொள்ள முடியும் என்பதுடன் Special Messages (Service) ஆல் இந்த பிரிவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இது தொடர்பான விபரங்களை அறிய இணைப்பு 01 இனை பார்க்கவும்.)

07. நிகழ்நிலையில் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பது கடினமாக இருக்கும் சந்தர்ப்பங்களில், இணைந்த சேவைகள் சுற்றறிக்கை : 02/2015 ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட CST/01 படிவத்தை (A4 தாளின் இருபுறமும் (Both Sides) அச்சிடப்பட்ட) சமர்ப்பித்தல் போதுமானது என்றாலும், முடிந்தவரை நிகழ்நிலையில் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் வினைத்திறமையான சேவையை வழங்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

08. இணைந்த சேவைகள் பிரிவால் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனான முறையில் பேணுவதற்காக மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளுக்கு தங்களின் தயவான ஆதரவை எதிர்பார்க்கின்றேன்.

ஒப்பம்./ எஸ்.ஆலோக்கபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு 01

# இடமாற்றம் தொடர்பான அறிவிப்புகள்

பயனர் உள்நுழைவு மூலம் கணினி அமைப்பில் உள்நுழையும்போது தோன்றும் முகப்புப் பக்கத்தில் (Home Page) உள்ள Notice அறிவிப்பின் மூலம் தாங்கள் அறிந்து கொள்ள முடியும் என்பதுடன் Special Messages (Service) இல் இணைந்த சேவைகள் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படும் அறிவிப்புகளையும் தெரிந்து கொள்ள முடியும்.




## 01. இடமாற்றம் தொடர்பான தேவைகளை புதுப்பித்தல்

இங்கே தோன்றும் Action என்பதனை தாங்கள் தேர்ந்தெடுக்கும்போது, கீழே உள்ளவாறு ஒரு இடைமுகம் (Inter Face) தோன்றும், அதிலுள்ள Combo Box இல் உள்ள தேர்வுகளில் தங்கள் தேவையை குறிப்பிடவும்.






அங்கே உள்ள தேர்வுகளில் மேலும் இடமாற்றம் தேவையில்லை என்றால், CANCEL என்பதைத் தேர்ந்தெடுத்து, UPDATE Button ஐ click செய்யவும். பின்னர் இடமாற்ற கோரிக்கை அகற்றப்படும் என்பதுடன், அத்தகைய கோரிக்கைகள் தொடர்பில் மறுபரிசீலனை செய்யப்பட மாட்டாது.

PENDING என்பது தேர்ந்தெடுக்கப்பட்டால், உரிய கோரிக்கை தொடர்பில் மேலதிக நடவடிக்கைக்காக தரவு அமைப்பில் தொடர்ந்தும் தக்கவைக்கப்படும்.

Type your remarks என குறிப்பிட்டுள்ள Text Box இல் இணைந்த சேவைகள் பிரிவுக்கு தெரிவிக்க வேண்டிய கருத்துக்கள் இருப்பின் அதனை தட்டச்சு செய்து UPDATE Button ஐ click செய்யவும்.

அலுவலரின் வேண்டுகோளின்படி இடமாற்றம் அனுமதிக்கப்பட்டிருந்தால், அது முகப்புப் பக்கத்தில் Home Page இல் உள்ள Notice இல் தோன்றும்.